**<u>கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை</u>**

**<u>பிறப்பிப்பவர்:- திரு. பி.என். ஸ்ரீதர், இ.ஆ.ப.,</u>**

**ந.க.எண். 3466 / 2009 / ப5** **நாள்.29.04.2024**

பொருள்: பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – நாகர்கோவில் மண்டலம் – கன்னியாகுமரி மாவட்டம் – திற்பரப்பு பேரூராட்சி – வரித்தண்டலராக கருணை அடிப்படையில் 18.06.2014–ல் பணிநியமனம் செய்யப்பட்டது – பிரதீவ்ராஜ் (செல்வன்) மு. என்பவருக்கு பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

பார்வை :

1. அரசாணை (நிலை) எண். 80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)த்துறை, நாள். 02.03.2016.
2. கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண். 3466 / 2009 / ப5, நாள்.16.06.2014.
3. இணை இயக்குநர் (பொது) பேரூராட்சிகள் இயக்ககம் கடிதம் ந.க.எண். 3724/2017–6/அ6, நாள். 12.03.2024.
4. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ–1) துறை அரசு கடித efile எண். 547/பேரூ–1/2024–1, நாள். 23.01.2024.

*****

**<u>உத்தரவு :-</u>**

நாகர்கோவில் மண்டலம், கன்னியாகுமரி மாவட்டம் திற்பரப்பு பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்த போது கடந்த 29.08.2009–ல் பணியிடைக்காலமான திரு. ச. முருகன் என்பவரின் மகனும் வாரிசுதாரருமான செல்வன். மு. பிரதீவ்ராஜ் என்பவருக்கு கருணை அடிப்படையில் பார்வை 2–ல் காணும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைப்படி திற்பரப்பு பேரூராட்சியில் வரித்தண்டலராக பணிநியமனம் செய்து உத்தரவிடப்பட்டது. அதன் அடிப்படையில் தனியர் 18.06.2014 மு.ப. முதல் பணியில் சேர்ந்து நாளது வரை பணிமுறிவின்றி, கன்னியாகுமரி மாவட்ட பேரூராட்சி அலகில் (தற்போது) விலவூர் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணியாற்றி வருகிறார். பார்வை 3–ல் காணும் இணை இயக்குநர் (பொது) பேரூராட்சிகள் இயக்ககம் அவர்களின் கடிதம் மற்றும் 4–ல் காணும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ–1) துறை அரசு கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளபடி மற்றும் அரசு ஆணை எண். 80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)த்துறை, நாள். 02.03.2016–ன்படி, 01.01.2016–க்கு முன்னர் கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எவ்வித விதிதளர்வு (**Relaxation of Rules**) மற்றும் அரசாணைக்களுக்கு விலக்கு (**Exemption of Govt. orders**) ஏதும்

தேவையில்லை என்பதால், செல்வன். மு. பிரதீவ்ராஜ் என்பவருக்கு தனியர் கருணை அடிப்படையில் வரித்தண்டலராக பணியில் சேர்ந்த நாளான 18.06.2014 மு.ப. முதல் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

| வ. எண். | கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர் பெயர் / பதவி | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள். |
|---|---|---|---|
| 1. | செல்வன். மு. பிரதீவ்ராஜ்,<br>வரித்தண்டலர்,<br>திற்பரப்பு பேரூராட்சி<br>(தற்போது இளநிலை உதவியாளர்,<br>விலவூர் பேரூராட்சி) | 18.06.2014<br>(மு.ப. | 18.06.2014<br>(மு.ப. |

இப்பணிவரன்முறை உத்தரவினை, தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ள விலவூர் பேரூராட்சி செயல் அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார்.

29/4/24

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,

29/04/24

பெறுநர்,
செல்வன். மு. பிரதீவ்ராஜ்,
இளநிலை உதவியாளர்,
விலவூர் பேரூராட்சி.
(செயல் அலுவலர், விலவூர் பேரூராட்சி வழியாக)

**நகல்**

1. செயல் அலுவலர், விலவூர் பேரூராட்சி.
2. பேரூராட்சிகளின் இயக்குநர், இராஜா அண்ணாமலைப்புரம், சென்னை – 28.